<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No.137/2023
Date:23.03.2026.
DW2 - திரு. தேவதாசன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி இந்த வழக்கை சொத்து விஷயமாக தாக்கல் செய்து இருக்கிறார். வாதியின் பெயர் ரெஜினம்மாள். பிரதிவாதிகளின் பெயர் ரெஜீ ஸ். எனக்கு வாதி மற்றும் பிரதிவாதியின் பெயர்களும் தெரியாது, மற்றும் இந்த வழக்கை எதற்காக வாதி தாக்கல் செய்திருக்கிறார் என்ற விபரமும், வழக்கின் விபரங்களும் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தின் விபரங்கள் எனது மருமகன் ரெஜீஸ் தான் சொல்லிக் கொடுத்தார் என்றால், சரியல்ல. எனது மருமகன் ரெஜீஸ் திருமணத்திற்கு பிறகு வாதி குடும்பத்தில் நடந்த விவகாரங்கள் தான் எனக்கு தெரியும் என்றாலும், அதற்கு முந்தைய விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வாதி லொரேட்டாவை யார் திருமணம் செய்து கொடுத்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி அனிதா ஷெர்லி மற்றும் புனிதா ஆகிய இருவருக்கும் திருமணம் செய்து வைத்தது வாதி லொரேட்டா என்றால், சரியல்ல. வாதி லொரேட்டா அவ்வாறு திருமணம் செய்து வைக்கவில்லை என்ற விபரத்தை, லொரேட்டாவின் பெற்றோர்கள் சொன்னார்கள். 2015ம் வருடம் அவ்வாறு சொன்னார்கள். அவ்வாறு நான் வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு 5 பிள்ளைகள் உண்டு. 2 ஆண் மற்றும் 3 பெண் பிள்ளைகள். அவர்கள் 5 பேருக்கும் நான் தான் திருமணம் செய்து வைத்தேன். எனது பெயரில் சொத்துக்கள் உள்ளன. தற்போது 3 சென்ட் உள்ளது. எனது சொத்துக்களை எனது மகனுக்கு கொடுத்திருக்கிறேன். 1 மகனுக்கு இன்னும் கொடுக்க வேண்டும். எனது மகனுக்கு திருமணத்திற்கு முன்பு நான் சொத்துக்கள் எதையும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், சரிதான். எனது மருமகன் ரெஜீஸ் பெயரில் திருமணத்திற்கு முன்பு சொத்து எழுதிக் கொடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. அந்த நிலையில் திருமணத்திற்கு முன்பு ரெஜீஸ்க்கு சொத்து எழுதி வைக்கப்பட்டதற்கான காரணங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. ரெஜீஸ் தனது தாயாரையும், தகப்பனாரையும் கட்டாயப்படுத்தி, தனது திருமணத்திற்கு முன்பு வழக்கு பட்டிகை சொத்தில் தனது பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வாங்கிக்

கொண்டார் என்றால், சரியல்ல. எனது மருமகன் ரெஜீஸ்க்கு குடிப்பழக்கம் கிடையாது. அவருக்கும் எனது மகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர்கள் பிரிந்திருந்தார்கள் என்றால், சரியல்ல. எனது மகன்கள் இருவரும், ரெஜீஸ்–ன் மேல் காவல் நிலைத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு நான் வழக்கிற்காக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. எனது மூத்த மகன் போலீஸில் ரெஜீஸ்க்கு எதிராக புகார் கொடுத்து, விசாரணையில் போலீசார் ரெஜீஸை எச்சரித்து அனுப்பினார்கள் என்றால், சரியல்ல. ரெஜீஸ் பெயின்டர் வேலை செய்கிறார். ரெஜீஸின் தாயார் உடல் நிலை சரியில்லாமல் இருந்து இறந்து போனார். 5 நாள்கள் மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்த பின்னர் அவர் இறந்த விபரம் எனக்கு தெரியும். வழக்கு பட்டிகை சொத்தை ரெஜீஸ் பெற்றோரை வற்புறுத்தி எழுதி வாங்கின விபரத்தை, அவருடைய தாயார் வாதி லொரேட்டாவிடம் கூறியதை அறிந்த ரெஜீஸ் அவரை தாக்கியதால், அவருடைய தாயார் இறந்து போனார் என்றால், சரியல்ல. இது சம்பந்தமாக வாதி லொரேட்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியும் தாயாரும் 10 சென்ட் நிலம் இருப்பதாக என்னிடம் கூறினார்கள் என்று நான் உண்மைக்கு புறம்பாக குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் எனது மருமகன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன் என்றால், நியாயத்தை சொல்ல வந்திருக்கிறேன். நான் எனது மருமகனுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.